# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 02.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.** SA 1234/B/20

திரு.பி.கே.பழனிச்சாமி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
அந்தியூர்,
ஈரோடு மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.பி.கே.பழனிச்சாமி மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திரு.விஜய்குமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 21.10.2019 தேதியிட்ட மனுவில், அந்தியூர் வட்டம், பிரம்மதேசம் ஊராட்சி சந்தியபாளையம் ஏரியில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவது தொடர்பான தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், அந்தியூர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. 19.11.2019 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் தகவல் திருப்தியளிக்காததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 28.11.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்தும் தகவல் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் 04.02.2020 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 5 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டது. மேற்படி ஆணைக்கிணங்க வழக்கு எண். SA 1234/B/2020 தொடர்பான போதிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து மனுதாரர் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி மேல்முறையீட்டு மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என்றற மனுதாரரின் எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1234/B/20</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
அந்தியூர்,
ஈரோடு மாவட்டம்.

திரு.பி.கே.பழனிச்சாமி,
ஊராட்சிக்கோட்டை,
குருப்பநாய்க்கன்பாளையம் அஞ்சல்,
பவானி தாலுக்கா,
ஈரோடு மாவட்டம் - 638 301.

Copy to: File
MP/PA-06.11.20